**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No.9/2017**

**வழக்கு சாட்சி: PW.19**

**தேதி: 08.02.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **செல்வராஜ்** | **ஜாதி:** | **படையாச்சி** |
| **தந்தை பெயர் :** | **குப்புச்சாமி** | **தொழில்:** | **லோக பைலட் (ஓய்வு)** |
| **கிராமம்:** | **திருச்சி** | **சமயம்:** | **இந்து** |
| **தாலுகா:** | **திருச்சி** | **வயது:** | **60/2024** |

**1 வது எதிரி ஆஜர். 2, 3 எதிரிகள் ஆஜர் இல்லை. 2, 3 எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு-317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை:**

நான் தென்னக இரயில்வேயில் திருச்சியை தலைமையகமாக கொண்டு இரயில் வண்டியின் லோகோ பைலட்டாக பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 25.02.2017ம் தேதி 23.00 மணிக்கு இராமேஸ்வரத்திலிருந்து வாராணசி செல்லும் விரைவு வண்டியை திருச்சி வரை லோகோ பைலட்டாக இயக்கி சென்றேன். உதவி லோகோ பைல்லட்டாக மிதுன் என்பவரும், வண்டியின் கார்டாக டேவிட் குமார் என்பவரும் பணியில் இருந்தார்கள். அது விரைவு வண்டியாகும். காரைக்குடிக்கு அடுத்த நிறுத்தம் புதுக்கோட்டை தான். கடந்த 26.02.2015ம் தேதி அதிகாலை 2.50 மணியளவில் நான் இயக்கி சென்ற இரயில் நமணசமுத்திரம் இரயில்வே கேட்டை கடந்து புதுக்கோட்டை இரயில்வே நிலையம் வந்து சேர்ந்தேன். 75கி.மீ வேகத்தில் இரயிலை இயக்கி வந்ததாலும் இரவு நேரம் என்பதாலும் நான் இயக்கி வந்த இரயில் இன்ஜின் முன்பாக எதுவும் அடிப்பட்டதாக எனக்கு தெரியவில்லை. காரைக்குடி இரயில்வே போலீசார் அன்றைய தினம் அதிகாலை 2.50 மணிக்கு நமணசமுத்திரம் இரயில்வே கேட்டை கிராஸ் செய்த இரயிலை இயக்கியது நான் தானா என்று என்னிடம் விசாரித்தார்கள். நான், நான் தான் இயக்கினேன் என கூறினேன். நான் இயக்கி வந்த இரயிலை திருச்சியில் நிறுத்திவிட்டு ஓய்வில் சென்று விட்டோம். ஆய்வாளர் என்னை விசாரிக்க நடந்த விபரங்களை கூறினேன்.

1 முதல் 3 வரையுள்ள எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:

சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து என்னை போலீசார் விசாரித்தார்கள். திருச்சி இரயில் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். நான் முதல் விசாரணையில் கூறியுள்ள விபரங்களை தான் அப்பொழுதும் கூறினேன். எனக்கு பின்னாடி அதே வழித்தடத்தில் வேறு இரயில் எதுவும் வரவில்லை. எனக்கு முன்பாக வேறு இரயில் எதுவும் சென்றதா என்ற விபரம் எனக்கு தெரியாது. நான் 75கி.மீ வேகத்தில் இரயிலை இயக்கி வந்ததால் இரயில் தண்டவாளத்தில் யாரும் கடந்து இரயிலில் அடிபட்டால் எனக்கு தெரிய வாய்ப்பில்லை என்றால் சரிதான்.